செ.வெ.எண்:1034 23.11.2010

# தேசிய அளவில் தமிழகம் மூன்றாமிடம்

## மாநிலங்களின் வளர்ச்சி குறித்து "இந்தியா டுடே" இதழ் மதிப்பீடு – விருது

பிரபல இதழான "இந்தியா டுடே", கடந்த சில ஆண்டுகளாக தேசிய அளவில் பெரிய மற்றும் சிறிய மாநிலங்களின் வளர்ச்சியை குறித்து ஆய்வு செய்து, அவற்றின் செயல் திறன் அடிப்படையில் தரவரிசைப்படுத்தி விருது வழங்கி வருகின்றது.

2010 ஆம் ஆண்டிற்கான 'இந்தியா டுடே' விருதினை வழங்கிட, ஏதுவாக மாநிலங்களை தரப்படுத்த ஒவ்வொரு மாநிலத்திலும், தற்போது உள்ள வளர்ச்சி மற்றும் நிதி நிலை, சட்டம் ஒழுங்கு, சுகாதாரம், கல்வி, நுகர்வோர் சந்தை, விவசாயம், உள்கட்டமைப்பு, முதலீடு ஆகிய எட்டு தலைப்புகளின் கீழ் பல்வேறு பொருட்கள் குறித்து ஆய்வுகளும் மதிப்பீடுகளும் செய்யப்பட்டு, அவற்றின் அடிப்படையில், 20 பெரிய மாநிலங்கள், மற்றும் 10 சிறிய மாநிலங்களின் தற்போதைய நிலை குறித்து தரவரிசை நிர்ணயிக்கப்பட்டு, சிறந்த நிலையில் உள்ள மாநிலங்களுக்கு 'இந்தியா டுடே' இதழின் மூலம் 19.11.2010 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் விருதுகள் வழங்கப்பட்டன.

20 பெரிய மாநிலங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி அடிப்படையிலான வரிசைப் பட்டியலில் தமிழ்நாடு மூன்றாம் இடம் பெற்றுள்ளதை ஒட்டி, இவ்விழாவில் மேதகு குடியரசு துணைத்தலைவர் அவர்களால் இந்தியா டுடே விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது. தமிழக அரசின் சார்பாக இவ்விருதினை புதுதில்லி தமிழ்நாடு இல்ல ஆணையர் திரு.பி.ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் மேதகு குடியரசு துணைத்தலைவரிடம் இருந்து பெற்றுக் கொண்டார். மாண்புமிகு தமிழக துணை முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (23.11.2010) மாலை தலைமைச் செயலகத்தில், இவ்விருதினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் அளித்தார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9